செய்தி வெளியீடு எண்: 139 நாள்: 21.02.2019

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 19.2.2019 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் 2018–19ஆம் ஆண்டிற்கான வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகளை 7 கைவினைஞர்களுக்கும், பூம்புகார் மாநில விருதுகளை 10 கைவினைஞர்களுக்கும், பட்டு வளர்ச்சித் துறை சார்பில் மாநில அளவில் 3 சிறந்த பட்டு விவசாயிகளுக்கு பரிசுத் தொகையும் வழங்கி கௌரவித்தார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள கைவினைஞர்களை ஊக்குவிக்கவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடனும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், பூம்புகார் என்ற பெயருடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. கைவினைஞர்களை போற்றும் விதமாக தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளை ஒவ்வொரு ஆண்டும் வழங்கி கௌரவித்து வருகிறது.

தமிழ்நாட்டில் கைத்திறன் தொழிலில் பணிபுரிந்து அதற்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட கைவினைஞர்களுக்கு "வாழும் கைவினைப் பொக்கிஷம்" என்ற உயரிய விருது வழங்கப்படும் என்று 8.5.2013 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்கள். அதன்படி, 65 வயதிற்கு மேற்பட்ட திறன்மிகு கைவினைஞர்களுக்கு, ''வாழும் கைவினைப் பொக்கிஷம்'' என்ற விருது 2013–14ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதானது, ஒரு லட்சம் ரூபாய் ரொக்கப்பரிசு, 8 கிராம் தங்கப்பதக்கம், ஒரு தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் கொண்டதாகும்.

2018–19ஆம் ஆண்டிற்கான ''வாழும் கைவினைப் பொக்கிஷம்'' விருதுகள் திரு. அ. சுப்ரமணியம் சிற்பி, திரு.செ. அப்துல் காதர், திருமதி பொ. இசக்கியம்மாள், திரு.ஆ. கோபாலன் ஸ்தபதி, திரு.இரா. கிருஷ்ணமூர்த்தி, திரு.பொ. கிருஷ்ணமூர்த்தி, திரு.கோ. சிதம்பரம் ஆகிய 7 விருதாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலா ஒரு லட்சம் ரூபாய் ரொக்கப்பரிசு, 8 கிராம் தங்கப்பதக்கம், ஒரு தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்கள்.

கைவினைப் பொருட்களைத் தயாரிக்கும் கைவினைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், சிறந்த 10 கைவினைஞர்களுக்கு ஆண்டுதோறும் ''பூம்புகார் மாநில விருது'' தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதுகள், 50 ஆயிரம் ரூபாய் ரொக்க

பரிசுடன், 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ் ஆகியன உள்ளடக்கியதாகும். இவ்விருது பெறும் கைவினைஞர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவராக இருக்கும் பட்சத்தில் இந்திய அரசால் வழங்கப்பட்டு வரும் மாதாந்திர ஓய்வூதியம் ரூ.3500/– பெற தகுதி உடையவராகிறார்கள்.

2018–19ஆம் ஆண்டு பூம்புகார் மாநில விருதுகளை திரு.பி. கிருஷ்ணன், திரு.டி.என். ஆறுமுகம், திருமதி எஸ். தெய்வாணை, திரு.கே. சந்திரசேகர், திரு.எம். அசோகன், திரு.எம். விஜய், செல்வி என். முத்துமீனாட்சி, திரு.வி. ஆனந்த், திருமதி சி. குணவதி, திருமதி டி. மாலா ஆகிய 10 விருதாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலா 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு, 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்கள்.

புதுடில்லியில் 9.2.2019 அன்று மத்திய அரசின் ஜவுளித் துறை அமைச்சகத்தின் சார்பில் நடைபெற்ற ‘‘சர்ஜிங் சில்க்’’ என்ற நிகழ்ச்சியில், 2017–18 மற்றும் 2018–19ஆம் ஆண்டுகளில் நாட்டிலேயே ‘‘சில்க் சமக்ரா’’ திட்டத்தினை சிறப்பான முறையில் செயல்படுத்தியதற்காக மாண்புமிகு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டிற்கு தேசிய விருது வழங்கப்பட்டது. மத்திய அரசால் வழங்கப்பட்ட அவ்விருதினையும் சான்றிதழையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் திரு. குமார் ஜயந்த், இ.ஆ.ப., அவர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

2018-19ஆம் ஆண்டிற்கான பட்டு வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில், மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே 1 லட்சம் ரூபாய், 75 ஆயிரம் ரூபாய் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, 2018–19ஆம் ஆண்டிற்கான மாநில அளவில் சிறந்த பட்டு விவசாயிக்கான முதல் பரிசுக்கான 1 லட்சம் ரூபாய்க்கான வங்கி வரைவோலையை திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. எம். விஸ்வநாதன் அவர்களுக்கும், இரண்டாம் பரிசுக்கான 75 ஆயிரம் ரூபாய்க்கான வங்கி வரைவோலையை கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. பி. சடையப்பன் அவர்களுக்கும், மூன்றாம் பரிசுக்கான 50 ஆயிரம் ரூபாய்க்கான வங்கி வரைவோலையை நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி பி. சாந்தி

அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வழங்கி கௌரவித்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் திரு. குமார் ஜயந்த், இ.ஆ.ப., தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் சந்தரமோகன்.B, இ.ஆ.ப., பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர் திருமதி ப. ஸ்ரீவெங்கட பிரியா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 21.2.2019**